மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.02/2021
அ.வ.எண்.42/2021

கோபால் ...மனுதாரர்/வாதி

/எதிராக/

1. காவேரி
2. பாலு
3. சரவணன்*
4. முருகேசன்
5. சித்தையன்*
6. ரமேஷ்
7. மயில்சாமி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

*(Amended as per order in I.A.No.03/2022 dt.17.11.2022)

இம்மனு கடந்த 16.12.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.ஏ.ராமகிருஷ்ணன், திருமதி.M.செல்வி அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4, 6 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.ஸ்டாலின்ராஜா அவர்கள் ஆஜராகியும், 3, 5 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39 விதிகள் 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : -

(i) தாவா சொத்திலுள்ள மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு அத்துமீறி நுழைந்து இடையூறோ, ஆக்கிரமிப்போ செய்யக்கூடாது என வாதி/மனுதாரரால் நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் கடந்த 03.02.1972ம் தேதியில் அய்யண்ணகவுண்டர் வகையறாக்களிடமிருந்து அம்மாசியம்மாள் என்பவர் கிரயம் பெற்று அனுபவித்து வந்தார். மேற்படி அம்மாசியம்மாளுக்கு ஐய்யந்துரை, சின்னுகவுண்டர், மனுதாரர், ராஜேந்திரன், மாரியம்மாள் ஆகியோர் வாரிசுகள் ஆவர். மேற்படி அம்மாசியம்மாள் தன் பெயரில் வாங்கிய நிலத்தை சின்னுகவுண்டர், மனுதாரர், ராஜேந்திரன் ஆகியோருக்கு கடந்த 20.02.2013ம் தேதியன்று பாகப்பிரிவினை செய்ததில் "D" ஷெட்யூல் சொத்தானது மனுதாரருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது. மேற்படி சொத்து மனுதாரரது பெயரில் பட்டா மாற்றம் செய்து சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்தார்.

(ii) இந்நிலையில் கடந்த 04.01.2021ம் தேதியன்று எதிர்மனுதாரர்களும், அவர்களது ஆட்களும் தாவா நிலத்திற்குள் அத்துமீறி நுழைந்து தென்னை கன்றுகள், வேலி, வேளாண் மரங்கள் ஆகியவற்றை நெருப்பு வைத்து எரித்துவிட்டனர். இதுகுறித்து காவல்நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில் காவல்துறையினர் எதிர்மனுதாரர்களை கண்டித்தும் எதிர்மனுதாரர்கள் எதற்கும் கட்டுப்படாமல் வீண் தகராறு செய்து வந்ததால் பஞ்சாயத்து வைத்தும் எதிர்மனுதாரர்கள் தொடர்ந்து மீண்டும் மனுதாரர்களுடைய சுவாதீனத்திற்கு மிகுந்த இடைஞ்சல்கள் செய்து வந்தனர். மேலும் கடந்த 17.01.2021ம் தேதியன்று எதிர்மனுதாரர்கள் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து மனுதாரர்களுக்கு மிகுந்த இடைஞ்சல்கள் செய்ததால் மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 2, 4, 6 மற்றும் 7ம் பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

<u>(குறிப்பாணையின் பேரில் பதிலுரை இம்மனுவின் 1, 2, 4, 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்களால் தங்களது எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் செல்லதக்கதல்ல. தாவா

சொத்தானது பாகப்பிரிவினை மூலமாக மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என கூறுவது உண்மை. ஆனால் கடந்த 04.01.2021ம் தேதியன்று எதிர்மனுதாரர்களும், அவர்களது ஆட்களும் தாவா நிலத்திற்குள் அத்துமீறி நுழைந்து தென்னை கன்றுகள், வேலி, வேளாண் மரங்கள் ஆகியவற்றை நெருப்பு வைத்து எரித்தனர் என்று கூறுவது தவறானதாகும். அதனடிப்படையில் மனுதாரர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததில் பிரதிவாதிகளை கண்டித்து அனுப்பினர் என்பதும், கடந்த 17.01.2021ம் தேதியன்று எதிர்மனுதாரர்கள் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து மனுதாரர்களுக்கு மிகுந்த இடைஞ்சல்கள் செய்தனர் என்பதும் உண்மைக்கு புறம்பான சங்கதியாகும்.

(ii) மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்திற்கு அருகில் ஓடை புறம்போக்கு நிலம் அமைந்துள்ளது. மேற்படி ஓடை புறம்போக்கு வழியானது சூரப்பள்ளி கிராமத்தை சேர்ந்த நரியம்பட்டி சின்னானூருக்கு அருகிலுள்ள வாத்தியப்பட்டி என்ற ஊரிலுள்ள ஏரியிலிருந்து தண்ணீர் செல்லும் ஓடை புறம்போக்கு நிலமாகும். மேற்படி ஓடையானது தோரமங்கலம், செலவடை ஆகிய ஊர்களுக்கு செல்லும் ஏரிகளுக்கு தண்ணீர் செல்லும் வழித்தடமாகும். மேற்படி ஓடை புறம்போக்கில் மனுதாரரின் நிலத்திற்கு இணைந்த நிலத்தில்தான் சின்னானூர் மற்றும் நரியம்பட்டி ஊர்களை சார்ந்த மக்கள் இறந்தால் அவர்களை அடக்கம் செய்யும் மயானப்பகுதியாக சுமார் 50 ஆண்டுகாலமாக பயன்படுத்தி வருகிறார்கள். மேற்படி ஓடை புறம்போக்கில் உள்ள வேலி, வேளான்மரங்களை அகற்றி அண்மையில் இறந்தவரின் சடலத்தை அடக்கம் செய்யும் போது தான் மனுதாரர் பிரச்சனை செய்தார். அப்போதுதான் மனுதாரர் ஓடை புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து அதில் தென்னங்கன்றுகள் வைத்திருந்த விவரம் எதிர்மனுதாரர்களுக்கு தெரியவந்தது.

(iii) மேற்படி ஓடை புறம்போக்கை மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்ததை இந்த எதிர்மனுதாரர்கள் எந்தவிதத்திலும் ஆட்சேபனை செய்யவில்லை. அவர் ஆக்கிரமிப்பு செய்த பகுதியை தவிர்த்து மற்ற பகுதியில் இருந்த வேலி, வேளான்மரங்களை அகற்றிவிட்டு, சடலத்தை அடக்கம் செய்தனர். அதன் பின்னிட்டு அடக்கம் செய்வதற்காக அப்புறப்படுத்தப்பட்ட வேலி வேளாண் முற்களை மனுதாரரே நெருப்பு

வைத்துவிட்டு இந்த எதிர்மனுதாரர்கள் மீது தவறான புகாரை கொடுத்துள்ளார். மேற்படி புகாரின் அடிப்படையில் காவல் துறையினர் விசாரித்தபோது மனுதாரரின் புகாரானது தவறானது என்றும், மேற்படி நிலம் ஓடை புறம்போக்கு நிலம் என்றும், அதில் இறந்தவர்களை அடக்கம் செய்துவருவதையும் தெரிந்து கொண்டு மனுதாரருக்கு அறிவுரை கூறி அனுப்பினர். மேற்படி சங்கதிகளை மறைத்து மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த தாவா மனுதாரருக்கு சம்பந்தப்பட்ட பட்டா நிலத்திற்கும், இந்த எதிர்மனுதாரர்கள் அப்புறப்படுத்திய நிலத்திற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை. மனுதாரர் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 2, 4, 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் தாவா சொத்து கடந்த 20.02.2013ம் தேதிய குடும்ப பாகப்பிரிவினையில் "D" ஷெட்யூல் பாகமாக மனுதாரருக்கு பாத்தியப்பட்டு, அதில் மனுதாரர் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும், இந்நிலையில் கடந்த 04.01.2021ம் தேதியன்று எதிர்மனுதாரர்களும், அவர்களது ஆட்களும் தாவா நிலத்திற்குள் அத்துமீறி நுழைந்து தென்னை கன்றுகள், வேலி, வேளாண் மரங்கள் ஆகியவற்றை நெருப்பு வைத்து எரித்துவிட்டனர் என்றும், எதிர்மனுதாரர்கள் தொடர்ந்து மனுதாரர்களுடைய சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்து

வருகின்றனர் என்றும், மீண்டும் கடந்த 17.01.2021ம் தேதியன்று எதிர்மனுதாரர்கள் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து மனுதாரர்களுக்கு இடையூறு செய்ததால் மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) 1, 2, 4, 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்து பாகப்பிரிவினைப்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பது உண்மையே என்றும், ஆனால் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து வேளாண் மரங்களை எதிர்மனுதாரர்கள் அழிம்பு செய்ததாக கூறுவது பொய்யானது என்றும், தாவா சொத்திற்கு அருகில் ஓடை புறம்போக்கு நிலம் அமைந்துள்ளது என்றும், மேற்படி நிலம் ஊர்மக்களால் மயானப்பகுதியாக சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும், மேற்படி ஓடை புறம்போக்கு நிலத்தை மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, இறந்தவர்களின் சடலத்தை நல்லடக்கம் செய்யும்போது பிரச்சனை செய்தார் என்றும், மேற்படி சங்கதிகளை மறைத்து மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், பிரச்சனைக்குரிய நிலத்திற்கும், மனுதாரரின் பட்டா நிலத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், மனுதாரர் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா சொத்திலுள்ள மனுதாரரின் சுவாதீன அனுபவத்திற்கு அத்துமீறி நுழைந்து இடையூறோ, ஆக்கிரமிப்போ செய்யக்கூடாது என வாதி/மனுதாரரால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் 1, 2, 4, 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்தின் அருகிலுள்ள ஓடை புறம்போக்கு நிலத்தை மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, அதில் இறந்தவரின் உடலை அடக்கம் செய்யவிடாமல் பிரச்சனை செய்கிறார் என்றும், பிரச்சனைக்குரிய நிலத்திற்கும், மனுதாரரின் பட்டா நிலத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், உண்மை சங்கதிகளை மறைத்து மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இச்சூழ்நிலையில் மனுதாரர் தாவாவில் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரத்தையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரரால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில், இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது தாவா சொத்தின் பேரிலுள்ள தனது சட்டப்படியான சுவாதீன அனுபவத்தை மனுதாரர் நிரூபித்தாரா? என்பதும், தாவா சொத்தை மனுதாரர் பயன்படுத்துவதற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தனரா? என்பதும், எதிர்மனுதாரர்கள் கூறுவதுபோல் மனுதாரர் ஓடை புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து அனுபவித்து வருவதாக எதிர்மனுதாரர்கள் நிரூபித்துள்ளனரா? என்பதுமே ஆகும்.

(vi) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2025.01.23 17:10:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

ம.சா.ஆ.1 20.02.2013 பாகப்பிரிவினை பத்திரம் பதிவுநகல்

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 | 05.01.2021 மனு ரசீது | அசல் |
| ம.சா.ஆ.3 | 27.08.2016 பட்டா எண்.3060 ன் கணிணி பட்டா | கணிணிநகல் |
| ம.சா.ஆ.4 | 23.02.2021 சொத்துவரி ரசீது | அசல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2025.01.23 17:10:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.